கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திருமதி.A.அன்னலெட்சுமி M.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)
வள்ளியூர்

2026 ஆம் வருடம் ஜூலை மாதம் 03-ஆம் நாள், வெள்ளிக்கிழமை

சுருக்குமுறை வழக்கு எண்.95/2023

(CNR No.TNTL-09-000509-2023)

M. செல்வ சேகர்
த.பெ.முத்துகிருஷ்ணன் ...புகார்தாரர்

/எதிர்/

P.கணேசன்
த.பெ. பரமசிவன் .... எதிரி

இவ்வழக்கானது 03.07.2026 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.H.முகம்மது ரியாஸ் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N. செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், புகார்தாரர் தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.03 17:23:53 +0530

தீர்ப்புரை

புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 200 மற்றும் மாற்றுமுறை ஆணைச்சட்டம் 1881 பிரிவு 138 மற்றும் 142 ன்படி இந்த குற்ற முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுதாரர் தரப்பு வழக்கின் சுருக்கம் :**

கடந்த ஜீலை 2022 ம் தேதி எதிரி புகார்தாரரிடம் ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மதிப்பிலான நெல்லை கடனாக பெற்றிருந்தார். மேற்படி தொகை ரூ.3,00,000/- த்தை 3 மாத காலத்திற்குள் தந்துவிடுவதாகவும் உறுதி அளித்தார். ஆனால், எதிரி உறுதியளித்தவாறு 3 மாத காலத்திற்குள் மனுதாரருக்கு கொடுத்த வாக்கின்படி நடவாமல் இருந்து வந்துள்ளார்.

மேலும், எதிரி கடந்த 1.12.2022 அன்று மனுதாரருக்கு கொடுக்க வேண்டிய தொகைக்கு 27.01.2023 தேதியிட்டு எதிரி கணக்கு வைத்துள்ள ஆக்ஸிஸ் வங்கி, திருக்குறுங்குடி கிளையில் காசோலை எண். 037053 என்ற காசோலையினை 31.01.2023 அன்று வரவுக்கு செலுத்தும்படிக்கும் அந்த சமயத்தில் தன்னுடைய வங்கி கணக்கில் போதுமான தொகை இருக்கும் என்று கூறி வழங்கினார். எதிரி கூறியபடி புகார்தாரர் 31.01.2023 அன்று மேற்படி காசோலையை அவர் கணக்கு வைத்துள்ள தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, தெற்கு கள்ளிகுளம் கிளையில் தாக்கல் செய்தபோது காசோலையின் மதிப்பு மறுக்கப்பட்டு போதிய பணம் இல்லை என காரணம் கண்டு 02.02.2023 ல் திரும்பக் கொடுக்கப்பட்டது. எனவே, புகார்தாரர் தனது

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.03 17:24:01 +0530

வழக்கறிஞர் மூலம் 28.02.2023 ம் தேதி அன்று பதிவு தபால் மூலம் காசோலை தொகையை சட்ட அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் செலுத்த கேட்டு எதிரிக்கு அறிவிப்பு ஒன்றை அனுப்பியிருந்தார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை எதிர்மனுதாரர் கடந்த 03.03.2023 ம் தேதி பெற்றுக்கொண்டும், நாளது தேதிவரை எவ்வித பதில் அறிவிப்பும் கொடுக்காமல் இருந்து வருகிறார்.

2) வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207 ன்படி ஆவணங்கள் நகல்கள் அனைத்தும் வழங்கப்பட்டது. எதிரிக்கு போதிய வாய்ப்பும் சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

3. <u>குற்றச்சாட்டு</u>

புகார்தாரர் தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரி குற்றம் புரிந்திருப்பார் என கருதவும் கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால் எதிரி மீது மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138 உ/இ 142 ன்படி குற்றத்தின் சாரம்சங்கள் குறித்து எதிரிக்கு படித்துக்காட்டி, விளக்கி கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார். எனவே, இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இந்த வழக்கில் புகார்தாரர் தரப்பில் பு.சா.1 விசாரிக்கப்பட்டு, பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.03 17:24:09 +0530

5. **<u>புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் புகார்தாரர் தரப்பு வழக்கின் சுருக்கம்</u>**

புகார்தாரர் செல்வசேகர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, 27.01.2023 தேதியிட்ட வழக்கு காசோலை அசல் ம.சா.ஆ.1 ஆகவும், 02.02.2023 தேதியிட்ட வங்கி ரிட்டன் மெமோ ம.சா.ஆ.2 ஆகவும், 28.02.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது ம.சா.ஆ.3 ஆகவும், அஞ்சலக ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை.

6. புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313 (1) (ஆ)ன்படி வினவியபோது எதிரி அதனை மறுத்துரைத்தார்.

<u>7) வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை</u>

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால் புகார்தாரர் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

<u>8) தீர்வு</u>

புகார்தாரரின் புகார், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. கடந்த ஜீலை 2022 ம் தேதி எதிரி புகார்தாரரிடம் ரூ.3,00,000/- (ரூபாய்

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.03 17:24:17 +0530

ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மதிப்பிலான நெல்லை கடனாக பெற்றுள்ளார். மேற்படி தொகைக்கு மறுபயன் கண்டு 27.01.2023 என பின் தேதியிட்டு எதிரி கணக்கு வைத்துள்ள ஆக்ஸிஸ் வங்கி, திருக்குறுங்குடி கிளையில் காசோலை எண். 037053 என்ற காசோலையினை கொடுத்துள்ளார். மேற்படி காசோலை பு.சா.ஆ.1 ஆகும். மேற்படி கடந்த 31.01.2023 அன்று புகார்தாரர் அவர் கணக்கு வைத்துள்ள தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி, தெற்கு கள்ளிகுளம் கிளையில் தாக்கல் செய்தபோது காசோலையின் மதிப்பு மறுக்கப்பட்டு போதிய பணம் இல்லை என காரணம் கண்டு ரிட்டன் மெமோவுடன் புகார்தாரரின் வங்கியால் 02.02.2023 அன்று திருப்பிகொடுக்கப்பட்டுள்ளது. காசோலை திருப்பப்பட்டதற்கான மெமோ பு.சா.ஆ.2 ஆகும். புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் 28.02.2023 அன்று எதிரிக்கு சட்ட அறிவிப்பை கொடுத்துள்ளார். எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பு பு.சா.ஆ.3 ஆகும். எதிரி அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ரசீது மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டை பு.சா.ஆ.4 ஆகிய சான்று ஆவணங்கள் புகார்தாரரால் இந்த வழக்கை நிரூபிக்க குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

9. மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் வகையங்களின்படியும், மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்புகளின் படியும், மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் படியான குற்றத்தை உருவாக்குவதற்கு (constitute) புகார்தாரரால் கீழ்கண்ட உட்கூறுகள் நிறுவப்பட வேண்டும்.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.03 17:24:25 +0530

i) புகார்தாரருக்கு செல்லப்பட்ட வேண்டிய பணத்திற்காக எதிரியால் வங்கியில் பராமரிக்கப்படும் கணக்கில் இருந்து காசோலை எதிரியால் புகார்தாரருக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ii) எதிரியின் வங்கிக் கணக்கில் இருந்து புகார்தாரருக்கு காசோலை மூலமாக வழங்கப்படும் தொகை கடனை அல்லது வேறு ஏதேனும் பொறுப்பினை தீர்ப்பதற்காக வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

iii) மேற்படி காசோலை புகார்தாரரால் வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்யப்படும்போது வங்கியில் எதிரியின் வங்கிக் கணக்கில் போதிய பணம் இல்லை என்றோ அல்லது வங்கிக்கும் எதிரிக்கும் இடையே உள்ள உடன்பாட்டிற்கும் அதிகமாக காசோலை தொகை உள்ளது என்றோ காசோலை திருப்பப்பட்டிருக்க வேண்டும்.

10. மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ல் கண்ட நிபந்தனை வாசகங்களின்படி (proviso) பிரிவு 138 ன்படி தாக்கல் செய்வதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றிருக்க வேண்டும்.

i) காசோலை அதன் செல்லுபடியாகும் காலத்திற்குள் வங்கியில் செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ii) வங்கியில் இருந்து காசோலை திருப்பப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் காசோலை தொகையை செலுத்தக்கோரி எதிரிக்கு அறிவிப்பு அனுப்பியிருக்க வேண்டும்.

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.07.03 17:24:33 +0530

iii) மேற்படி அறிவிப்பினை பெற்ற 15 நாட்களுக்குள் காசோலை தொகையை திருப்பி செலுத்த எதிரி தவறியிருக்க வேண்டும்.

11. இவ்வழக்கில், i) வழக்கு காசோலை புகார்தாரரிடன் பெற்ற கடன் ரூ.3,00,000/-க்கான எதிரியால் அவருக்கு வங்கி கணக்குள்ள ஆக்ஸிஸ் வங்கி, திருக்குறுங்குடி கிளையில் காசோலை கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும், மேற்படி காசோலை பு.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறியமுடிகிறது.

ii) மேற்படி காசோலை புகார்தாரரிடம் பெற்ற ரூ.3,00,000/- த்திற்கான கடனை தீர்ப்பதற்காக எதிரியால் செலுத்தப்பட்டுள்ளது.

iii) மேற்படி காசோலை புகார்தாரரால் வங்கியில் செலுத்தப்பட்டடதில் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டுள்ளது. காசோலை திருப்பப்பட்டதற்கான ரிட்டன் மெமோ பு.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12) மேற்படி விபரங்களிலிருந்து வழக்கு காசோலை பு.சா.ஆ.1 எதிரியால் புகார்தாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி காசேலை எதிரியின் வங்கிக்கணக்கில் போதிய பணம் இல்லை என்று பு.சா.ஆ.2 ரிட்டன்மெமோ மூலமாக திருப்பப்பட்டுள்ளது என்றும் இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. மேலும், எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்கள் புகார்தாரர் வழக்கை பொய்பிக்கும் வகையில் அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.03 17:24:42 +0530

13) மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ல் கண்ட முன்நிபந்தனைகள் இவ்வழக்கில் கீழ்கண்டவாறு நிறைவேற்றப்பட்டுள்ளது.

i) 27.01.2023 ம் தேதியிட்ட பு.சா.ஆ.1 காசோலை அதன் செல்லுபடியாகும் காலத்திற்குள் புகார்தாரரால் 31.01.2023 ம் தேதி வசூலுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

ii) மேற்படி காசோலை வங்கியால் போதிய பணம் இல்லை என 02.02.2023 ம் தேதி பு.சா.ஆ.2 ரிட்டன் மெமோ மூலமாக திருப்பப்பட்டதிலிருந்து 15 நாட்களுக்குள் 28.02.2023 ம் தேதி புகார்தாரர் காசோலை தொகையை செலுத்தகோரி எதிரிக்கு தனது வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு பு.சா.ஆ.3 அனுப்பியுள்ளார்.

iii) மேற்படி அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டு 15 நாட்களுக்குள் காசோலை தொகை ரூ.3,00,000/-த்தை செலுத்த தவறியுள்ளார். புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலமாக அனுப்பப்பட்ட பு.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு எதிரியால் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதை அறியமுடிகிறது. எதிரி தரப்பில் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பப்படவில்லை. மேற்படி பு.சா.ஆ.3 எதிரிக்கு சட்ட முறைப்படி அனுப்பப்பட்டு பு.சா.ஆ.5 ன் மூலம் எதிரி மேற்படி சட்ட அறிவிப்பை பெற்றுள்ளார் என்பதையும் அறியமுடிகிறது.

14. வழக்கு காசோலை பு.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பம் எதிரியின் கையொப்பம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதி ஆகும். காசோலை வழக்கில் எதிரியின் கையொப்பம் ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையில் எதிரி புகார்தாரருக்கு செலுத்தவேண்டிய கடன் தொகைக்காக மேற்படி காசோலை வழங்கப்பட்டது

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.07.03 17:24:49 +0530

என்பதாக நீதிமன்றம் அனுமானிக்கலாம். இந்த வழக்கில் அந்த அனுமானத்தை பொய்பிக்கும் வகையில் எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அமையவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

15. மேற்கண்ட வழக்கு சூழ்நிலைகளின் கீழ், புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139 ன் கீழான அனுமானத்தின் பலனை பெறுவதற்கு தனது முதல்நிலை மெய்ப்பிக்கும் சுமையை நிரூபித்துள்ளார் என்றும், எதிரி மேற்படி அனுமானத்தை தனது எதிர்வாதம் மூலமாக முறியடிக்கவில்லை என்றும், புகார்தாரர் எதிரிக்கு எதிரான வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளார் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

16. வழக்கு இன்று தீர்ப்புக்காக உள்ள நிலையில், வழக்கின் தரப்பினர்கள் இருவரும் சேர்ந்து வழக்கு காசோலை தொடர்பான தொகையான ரூ.3,00,000/-த்தை எதிரி, புகார்தாரரிடம் வழங்கிவிட்டதாகவும், வழக்கில் செலவுத்தொகையை செலுத்திவிடுமாறும் அவர்களுக்குள் பேசி முடித்துக்கொள்ளப்படுகிறது என்று குறிப்பிட்டும் வழக்கினை செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி குறிப்பாணையின் அடிப்படையில் புகார்தாரரை இந்நீதிமன்றம் விசாரணை செய்தது. விசாரணையில் புகார்தாரர் வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கோரினார். மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 147 ன்படி காசோலை மோசடி தொடர்பான வழக்குகள்

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.07.03 17:24:57 +0530

தரப்பினர்களிடையே சமரசமாக தீர்த்துகொள்ளக்கூடிய குற்றமாகும். ஆகவே, தாவா வழக்கில் இருதரப்பினர்களுக்கிடையே கூட்டாக தாக்கல் செய்த குறிப்பாணையின் அடிப்படையில் தரப்பினர்களுக்கிடையே சமரசம் ஏற்பட்டுவிட்டதால் வழக்கினை தள்ளுபடி செய்யவதே நீதிக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே, எதிரி குற்றவாளி அல்ல என்று இந்நீதிமன்றம் கருதி அவ்வாறே தீர்வும் காண்கிறது.

முடிவாக, இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிக்கு எதிரான குற்றசாட்டிலிருந்து எதிரி விடுவிக்கப்பட்டதாக கருதி எதிரி ஏற்படுத்திய பிணை மேல்முறையீடு காலத்திற்கு பின்னர் ரத்து செய்யப்படும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் வருடம் ஜூலை மாதம் 03-ம் நாள் திறந்த வழக்கரங்கில் அவையறியப் பகரப்பட்டது.

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.07.03 17:25:03 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)

வள்ளியூர்

புகார்தாரர் தரப்பு சாட்சி:

பு.சா.1 - திரு. செல்வ சேகர்

<u>புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:

வ.எண்.	தேதி	ஆவணம்	விவரம்
பு.சா.ஆ.1	27.01.2023	ஆக்ஸிஸ் வங்கி திருக்குறுங்குடி கிளையில் வரையப்பட்ட 037053 என்ற எண் உள்ள ரூ.3,00,000/- க்கான கசோலை.	அசல்
பு.சா.ஆ.2	02.02.2023	ரிட்டன் மெமோ	அசல்
பு.சா.ஆ.3	28.02.2023	வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது	அலுவலக நகல் மற்றும் அசல்
பு.சா.ஆ.4	-	அஞ்சலக ஒப்புதல் அட்டை	அசல்

<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.03 17:25:09 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)

வள்ளியூர்

<u>குறிப்பு</u>

சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.03 17:25:15 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)

வள்ளியூர்

Additional District Munsif Court,

Valliyoor.

S.T.C. No.95/2023

Judgment

Dated: 03.07.2026.